*43*

# மறுரூபமாகுதல்

## (17:1-13)

*அதிகாரம் 17 பல பகுதிகளுக்கு ஒரு முடிவுரை போல் அமைந்துள்ளது (அதிகாரம் 14-17), இதை நாம் "இயேசுவின் ஊழியத்தில் தொடரும் பிரதிபலிப்புகள்" என்று மேல்சீட்டு ஒட்டினோம். மத்தேயு, ஆவியானவரின் உதவியால், இயேசுவைச் சுற்றிலும் இருந்தவர்கள் அவரை எப்படி நோக்கிப் பார்த்தார்கள், அவரை யாரென்று ஏற்றுக்கொண்டார்கள் மற்றும் அவர் என்ன செய்து கொண்டிருந்தார் என்பதையெல்லாம் நம்முன் வைக்கிறார். அடுத்ததாக, இயேசுவின் போதனை ஊழியத்திலிருந்த சிறப்புக்கூறுகளை மத்தேயு நான்காவது விரிவாக்கப்பகுதி போதனைக்குத் திரும்புகிறார் (அதி காரம் 18).*

*இந்த அதிகாரம் மறுரூபக்காட்சியை வெளிப்படுத்திக் துவங்குகிறது (17:1-13) அதிலே கிறிஸ்துவின் மகிமை வெளிப்படுத்தப்பட்டது. தன்னுடைய தவறான வைராக்கியத்தில் வழிநடத்தப்பட்டதற்கு பரிகாரமாக, பேதுரு மோசேயோடும் எலியாவோடும் இயேசுவைக் கனப்படுத்த வகைதேடுகிறார். தேவன் தமது குமாரனுடைய உயர்வான தன்மையை நிழலாட்டமான வார்த்தையால் பிரகடனம் செய்கிறார். மூன்று அப்போஸ்தலர்களிடமும் தேவன், இயேசுவுக்கு செவி கொடுக்கும்படி கட்டளையிட்டு, கிறிஸ்தவ யூகத்தை ஆளுகை செய்யும் கட்டளையாக வெளிப்படுத்தினார்.*

### மலையிலே இயேசுவின் மகிமை (17:1-8)

***1**ஆறுநாளைக்குப் பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக் கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போய்,*

***2**அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப் போல பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று.*

***3**அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள்.*

***4**அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால் இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான்.*

***5**அவன் பேசுகையில், இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.*

**[6]சீஷர்கள் அதைக் கேட்டு, முகங்குப்புறவிழுந்து, மிகவும் பயந்தார்கள்.**

**[7]அப்பொழுது இயேசு வந்து, அவர்களைத் தொட்டு: எழுந்திருங்கள், பயப்படாதேயுங்கள், என்றார்.**

**[8]அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில் இயேசுவைத் தவிர வேறொருவரையும் காணவில்லை.**

*தேவனுடைய அநேக வெளிப்பாடுகளும் வார்த்தை அறிவிப்புகளும் மலையுச்சிகளில் ஏராளமாக கொடுக்கப்பட்டன. பழைய ஏற்பாட்டில், நோவாவும் அவரது பேழையும், ஜலபிரளயத்துக்கு பின் அரராத் என்னும் மலையின் மேல் போய் நின்றார்கள் (ஆதியாகமம் 8:4). மோசே சீனாய் மலையின்மேல் நியாயப்பிரமாணத்தைப் பெற்றார் (யாத்திராகமம் 24:1, 16; 34:1-5) மற்றும் நேபோ மலையின் மேலிருந்து வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தை பார்வையிட்டார் (உபாகமம் 34:1-4). எலியா கர்மேல் பர்வதத்தில் பாகாலின் தீர்க்கதரிசிகளை எதிர்கொண்ட காட்சியைக் காண்கிறோம் (1 இராஜாக்கள் 18:19-40).*

*புதிய ஏற்பாட்டில், பெரும்பாலான மலை அனுபவங்கள் இயேசுவோடு கூட சம்பந்தப்பட்டுள்ளன. அவருடைய மாபெரும் மதிப்பை பெற்ற பிரசங்கம் கப்பர் நகூமின் அருகிலுள்ள ஒரு மலையின் மேல் அல்லது குன்றின் மேல் வெளியிடப்பட்டவைகள் தான் (மத்தேயு 5-7). கலிலேயாவிலிருந்த பெயரிடப்படாத ஒரு மலை உச்சியில், இயேசு பிரதானக் கட்டளையைக் கொடுத்தார் (28:7, 10, 16-20). ஒலிவ மலையிலிருந்து, இயேசு பரலோகத்தி லுள்ள பிதாவிடத்திற்கு ஏறிப்போனார் (நடபடிகள் 1:4-12). நம்முடைய இந்த வசனப்பகுதியான, மத்தேயு 17:1-8ல், "ஒரு உயர்ந்த மலையின் மேல்" குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஒன்று நடந்தது.*

*இயேசுவின் மூன்று நெருங்கிய அப்போஸ்தலர்களுடன் (பேதுரு, யாக்கோபு, யோவான்) மறுரூபக்காட்சி பகிர்ந்து கொள்ளப்பட்டது, இது ஒரு முக்கியமான காலக்கட்டத்தில் வந்தது. வரலிருந்த இராஜ்யத்தைக் குறித்து வாக்குத்தத்தம் பண்ணின பிறகு (16:28), இந்த மறுரூபக் காட்சியைக் கண்ணாரக் கண்டவர்களுக்கு இராஜாவின் மகிமையைக் குறித்து முன்கூட்டியே ருசித்துப் பார்க்கச் செய்தது. மேலும், பேதுரு இயேசுவை தேவனுடைய குமாரன் என்று செய்த அறிக்கையின் உண்மைத்துவத்திற்கு பிதாவினிடத்தில் வெளிப்பட்ட பிரகடன வார்த்தைகள் உறுதியளிப்பவைகளாக இருந்தன (16:16). இன்னும் கூடுதலாக, வரவிருந்த அவரது மரணம் (16:21) அவர்களின் சொந்தபாடுகளை அனுபவிக்கும் செயல் (16:24-26) ஆகியவைகள், அவர்கள் இயேசுவின் மகிமையைக் கண்டது மேலும் கூடுதலான உறுதியான தன்மையைக் கொடுத்திருக்கும் என்பதிலே சந்தேகமில்லை. உண்மையான இயல்பும் தெய்வீக மகிமையும் கொண்ட ஒருவர் சிலுவையில் அறைபட்டு பாடுபடுதல் என்பதை தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மேசியா மறுரூபமாகியதில் வெளிப்படுத்தப்பட்டது.[1]*

***வசனம் 1.** மத்தேயுவும் மாற்கும் காலக் குறிப்பீட்டின் படி **ஆறுநாளைக்குப் பின்பு** இயேசு தாம் மறுரூபமான மலையின்மேல் ஏறிப்போனார் என்று குறிப்பிடுகின்றனர் (மாற்கு 9:2). ஆகிலும், லூக்கா, முன்பு நடந்தவைகளுக்குபின், "ஏறக்குறைய எட்டு நாளான*

*பின்பு" நிகழ்ந்ததாக குறிப்பிடுகிறார் (லூக்கா 9:28). இந்த பதிவுகளிலே முரண்பாடுகள் எதுவுமில்லை. முதலாவதாக, லூக்கா "ஏறக்குறைய"* (*hōsei*) *எனும் பதத்தை பயன்படுத்தியிருக்கிறார் அல்லது "சுமார்"* (NIV), *எனும் பதம், அது அவர் துல்லியமாக குறிப்பிட முயற்சிக்கவில்லை என்பதை காட்டுகிறது. இரண்டாவதாக, லூக்கா ஒருவேளை யூதருடைய முறைப்படி காலத்தைக் கணக்கிட்டு குறிப்பிட்டிருக்கலாம்; அந்த முறைப்படி பகுதி நாள் ஒரு முழு நாளாக கணக்கிடப்பட்டது. மூன்றாவதாக சுவிசேஷ பொழிப்புரையை எழுதிய மற்ற ஆசிரியர்கள் கர்த்தர் தமது அப்போஸ்தலருக்கு வெளிப்படுத்திய போது அவரை நெருங்கிக் கொண்டிருந்த மரணத்தின் நாளையோ அல்லது உண்மையான மறுரூப நாளையோ கணக்கிடவில்லை, ஆனால் அவைகளுக்கு இடைப்பட்ட ஆறுநாட்களை மட்டும் கணக்கிட்டனர்.*

**பேதுரு, யாக்கோபு** *மற்றும்* **யோவான்** *ஆகியோர் கர்த்தரிடத்தில் நெருங்கியிருந்த நண்பர்கள், அவர்கள் "உள்வட்டம்" என்றும் குறிப்பிடுவது உண்டு. முன்பு மரித்த யவீருவின் மகளை எழுப்பியபோது இந்த மூன்று அப்போஸ்தலர்கள் மட்டுமே அங்கே இருந்தார்கள் (லூக்கா 8:41, 42, 51-56). பின்பு, மிகப் பெரிய வேதனையையும் வியாகுலத்தையும் கெத்சமனே தோட்டத்தில் அனுபவித்த நேரத்தில் அவர்கள் அவருக்கு அருகே இருந்தார்கள் (மத்தேயு 26:36-45). அவர்களிடத்தில் அவர் வைத்திருந்த தனிப்பட்ட சம்பந்தத்தினாலே, இந்த நிகழ்ச்சியில் தாம் அடைந்த மகிமையை அவர்களும் கண்டு சாட்சியிட வேண்டும் என்று அவர்களைத் தெரிந்து கொண்டார்.*

*இந்த மூன்று அப்போஸ்தலர்கள் மட்டுமே இந்த மகத்துவம் நிறைந்த காட்சியை காணும்படி அனுமதிக்கப் பட்டது ஏன்? அவர்கள் மட்டுமே எதையும் புரிந்து கொள்ளும் திறமையும் கர்த்தருடைய இக்கட்டான நிலைமை களில் அனுதாபப்படக் கூடியவர்களாயிருப்பார்கள் என்பதினாலா? இது உண்மையல்ல என்பதை பின்னதாக வரும் ஒரு வசன வாக்கியங்கள் இதை வெளிப்படுத்துகின்றன (லூக்கா 9:33). தமது சீஷர்களில் அவர்கள் முதலில் அழைக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையிலா? இதற்கு, நாம் அந்திரேயா, பிலிப்பு, நாத்தான்வேல் ஆகியோர் பற்றி என்ன என்று கேட்க வேண்டும் (யோவான் 1:35-51)?*

*இதற்குப் பொருத்தமான வேறெந்த ஆலோசனையையும் விட, கூடவந்து கவனிப்போரின் எண்ணிக்கை குறைவாக இருக்கவும், நேரம் வருவரை அது குறித்து வேறு யாருக்கும் சொல்லாதிருக்கவும் எளிய வழியை இயேசு கையாண்டிருக்கலாம் (காண்க 17:9). பிற்பாடு பேதுரு இச்சம்பவத்தைக் குறித்து, "அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்கள்" என்று தங்களைக் குறித்து எழுதினார் (2 பேதுரு 1:16). யோவானும் கூட மறுரூபக் காட்சியை மனதில் கொண்டே "அவருடைய மகிமையைக் கண்டோம்" என்று யோவான் 1:14ல் சொல்லியிருக்கக் கூடும். இயேசு மூன்று பேரை மட்டும் தம்மோடு கூட்டிக் கொண்டு போனதற்கு வேதாகமத்தின் கோரிக்கையான "இரண்டு அல்லது மூன்று சாட்சிகளின்" வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலவரப் பண்ணப்படும் என்பதற்கு ஏற்றதாகவுமிருக்கிறது (உபாகமம் 17:6; 19:15; மத்தேயு 18:16; 2 கொரிந்தியர் 13:1; 1 தீமோத்தேயு 5:19; எபிரெயர் 10:28).*

*மத்தேயு எழுதியுள்ளபடி, இயேசு இந்த மூன்று அப்போஸ்தலர்களையும்* **கூட்டிக் கொண்டு** *போன* **மலை உயரமான** *ஒன்றாயிருந்தது. எப்படியிருப்பினும், சுவிசேஷ எழுத்தாளர்களில் ஒருவரும் சரியான இடத்தைக் குறிப்பிடவில்லை. பிற்பாடு பேதுரு இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும்போது, "பரிசுத்த மலையில்" என்று மட்டுமே கூறுகிறார் (2 பேதுரு 1:18). எனவே எந்த இடம் என்று உறுதியாக அடையாளப்படுத்துவது இயலாதது.*

*பாரம்பரியத்தின்படி அது நாசரேத்திலிருந்து தென் மேற்கே ஆறு மைல் தொலைவில் உள்ள தாபோர் மலை என்று சொல்லப்படுகிறது. இந்த மலை பூகோள ரீதியாக கர்த்தர் கடைசியாக போதித்த இடத்திலிருந்து மூன்று நாள் பயணத்தொலைவில் இருந்ததாகக் கூறப்படுகிறது, அதாவது செசரியா பிலிப்பியிலிருந்து (16:13). ஆயினும், "உயர்ந்த மலையின்" மேல் போனதாகக் குறிப்பிடுகிறபடியாலும் தாபோர் மலையின் உயரம் சுமார் 1,800 அடி உயரம் மட்டுமே இருந்தபடியாலும் இரண்டும் பொருந்துவதாக இல்லை. அதோடு, கிறிஸ்துவின் நாட்களில் தாபோர் மலையின் மேல் ரோமர்களின் காவல் நிறுத்தப்பட்டு இருந்தது,[2] ஆதலால் அவர் அங்கே போயிருப்பாரா என்பதும் இந்தக் கருத்தை குறைத்துக் காட்டுகிறது.*

*எர்மோன் மலை அருகில் இருந்ததாகவும், அது செசரியாவிலிருந்து வடகிழக்கில் பதினான்கு மேல் தொலைவில், 9,000 அடிக்கு மேலான உயரமுள்ள சிகரங்கள் பனியால் மூடப்பட்டிருந்ததாகவும், இந்த நிகழ்ச்சி அநேகமாக அங்கே தான் நிகழ்ந்திருக்கும் என்றும் அநேகர் நம்புகின்றனர். இருப்பினும், யூத வேதபாரகர் (மாற்கு 9:14) வடக்கே எட்டியதூரம் வரை புறஜாதிகள் மட்டுமே இருந்த ஜனத்தொகையில் அவர்கள் மத்தியில் காணப்பட்டிருப்பார்களா என்ற கேள்வியும் எழும்புகிறது.*

*இன்னும் ஒரு உத்தேசமான ஆலோசனை அந்த இடம் மெயரான் மலையாக இருக்கலாம் என்பது தான். இந்த மலை கலிலேயாக் கடலிலிருந்து வடமேற்கில் எட்டாவது மைலில் இருந்தது. சரியாக பலஸ்தீனாவில் 4,000 அடி உயரமுள்ள மலை உச்சியைக் கொண்டது. செசரியா பிலிப்பியிலிருந்து (16:13) கப்பர் நகூமுக்குப் (17:24) போகிற வழியில் இருந்த மெயரான் மலைமேல் எளிதாக இயேசுவும் அவருடைய சீஷரும் பயணித்திருக்கலாம்.*

**வசனம் 2.** *இயேசு ஜெபிக்கும்படி மலையின்மேல் ஏறினார் (லூக்கா 9:28). அவர் ஜெபம் பண்ணுகிற போது, தமது சீஷர்களுக்கு முன்பாக* **மறுரூபமானார்.** *"மறுரூபமானார்"[3] எனும் கிரேக்க வார்த்தை (metamorphoō)* "metamorphosis" *எனும் ஆங்கில வார்த்தையின் பின்னணியையுடையது. இவ்வார்த்தை "மறுரூபமாகுதல்" என்று ரோமர் 12:2லும் 2 கொரிந்தியர் 3:18லும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. Metamorphoō என்றால் உள்ளே இருந்து வருகிற வெளி மாற்றம். மோசேயின் முகத்திலிருந்த பிரகாசம் போன்றது அல்ல, இயேசுவின் மகிமை (யாத்திராகமம் 34:29-35), ஆனால் அது அவருக்குள்ளிருந்து வந்த மகிமைப் பிரகாசம் (காண்க கொலோசெயர் 1:15; எபிரெயர் 1:3).* Michael J. Wilkins *இதை விவரித்து, "மனித உருவெடுத்து வருவதற்கு முன் இயேசுவுக்கு இருந்த மகிமையை நினைவூட்டும் சரீர மறுரூபம் (யோவான் 1:14; 17:5; பிலிப்பியர் 2:6, 7). மேலும் அது அவருக்கு வரவிருக்கிற உயர்வைக் குறித்த முன்னோட்டம் (2 பேதுரு 1:16-18; வெளிப்படுத்தின விசேஷம் 1:16)," அவருடைய மறுரூபம் "தேவனுடைய இயல்பையும் தெய்வீக மகிமையையும்*

*வெளிப்படுத்தியது" என்றார்.*[4]

***அவர் முகம் சூரியனைப்போல பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று.*** *இதை லூக்கா சொல்லும் போது, "அவருடைய முக ரூபம் மாறிற்று, அவருடைய வஸ்திரம் வெண்மை யாகிப் பிரகாசித்தது" என்றார் (லூக்கா 9:29). மாற்கு சற்றுக் கூடுதலாக விவரித்து, "அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப் போல் பூமியிலே எந்த வண்ணானாலும் வெளுக்கக்கூடாத வெண்மையாய்ப் பிரகாசித்தது" என்று சொன்னார் (மாற்கு 9:3). இந்த வாக்கியங்களெல்லாம் கர்த்தருடைய மாற்றம் பெற்ற காட்சியில் முக்கியத்துவம் பெற்றவைகளாக அவருடைய பரலோகதுவக்கத்தை வெளிப்படுத்துகிறது (காண்க தானியேல் 7:9; மத்தேயு 28:3; நடபடிகள் 1:10; வெளிப்படுத்தின விசேஷம் 1:16; 4:4; 7:13; 10:1).*

***வசனம் 3.*** *லூக்காவிலே சொல்லப்படுகிறபடி, மூன்று அப்போஸ்தலர்களும் நித்திரைமயக்கமாயிருந்தார்கள். அப்பொழுது நிகழ்வின் பெரும் பகுதி முடிந்திருந்தது. இந்த நம்பப்பட்ட அவருக்குப் பின் சென்றவர்கள் கிறிஸ்துவின் ஜீவியத்தின் இரண்டு முக்கியமான நிகழ்வு நேரங்களில் விழித்திருக்கக் கூடாமல் போனார்கள் என்பது மிகவும் வருத்தமிகு வஞ்சப் புகழ்ச்சியணியாகும்: அவருடைய மறுரூப நேரத்திலும் அவருடைய கெத்செமனே தோட்டத்து ஜெப நேரத்திலும் (லூக்கா 9:30-33; மத்தேயு 26:36-45). அவர்கள் திடீரென விழித்துக் கொண்ட போது, அவர்களுக்கு முன்பாக* ***எலியாவும் மோசேயும்*** *இயேசுவோடு பேசிக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். சீஷர்கள் எப்படி அவர்களை அடையாளம் கண்டு கொண்டார்கள் என்று வசனம் குறிப்பிடுவதில்லை; அவர்களின் உரையாடலிருந்து ஒருவேளை கண்டு பிடித்திருக்கலாம்.*

*இந்நிகழ்ச்சியின் போது இயேசுவோடு கூட மோசேயும் எலியாவும் தோன்றியது மிகச் சரியானது. மோசே இஸ்ரவேலுக்கு மாபெரும் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தவர் (காண்க யோசுவா 1:17), ஆகிலும் அவரே, "உன்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார்" என்று தேவன் சொன்னதாக எழுதியுள்ளார் (உபாகமம் 18:18). மோசே, தேவன் கட்டளையிட்டபடி, நேபோ மலையின் மேலே போய், "அங்கே மோவாபியரின் தேசத்திலே கர்த்தருடைய வார்த்தைகளின்படியே மரித்தான்." பிறகு தேவன் அவரை "மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம் பண்ணினார்; இந்நாள் வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக் குழியை அறியான்" (உபாகமம் 34:5, 6).*

*எலியா தேவனுடைய பெரிய தீர்க்கதரிசிகளில் ஒருவர். அந்த நேரத்தில் இஸ்ரவேலின் வடக்கு இராஜ்யத்தில் ஆளுகை செய்து கொண்டிருந்த ஆகாப் இராஜாவின் காலத்தில் பாகால் தொழுகைக்கு எதிர்த்து நின்றவர் என்று சொல்லி எலியா நன்கு அறியப்பட்டிருந்தார் (1 இராஜாக்கள் 16:29-19:18). மரித்துப் போகாத இரண்டு பேரில் ஒருவர் எலியா.*[5] *மாறாக, அவர் பரலோகத்துக்கு ஒரு சூழல் காற்றினாலே அக்கினி இரதத்தில் ஏறிப்போனார் (2 இராஜாக்கள் 2:11, 12).*

*மோசேயும் எலியாவும் தேவனுடைய வெளிப்பாடுகளை சீனாய்*

*மலையிலே அனுபவித்தவர்கள் (யாத்திராகமம் 24:12-18; 34:1-9; 1 இராஜாக்கள் 19:8-12). இரண்டு மனிதர்களும் பழைய ஏற்பாட்டின் கடைசி வார்த்தைகளால் குறிப்பிடப்பட்டார்கள்: "என் தாசனாகிய மோசேக்கு நான் கற்பித்த நியாயப்பிரமாணமாகிய கட்டளைகளையும் நியாயங்களையும் நினையுங்கள் ... நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்" (மல்கியா 4:5, 6). மோசேயும் எலியாவும் ஒன்றாக வருவார்கள் என்று யூதர்கள் எதிர்பார்த்தார்கள் என்பது தெளிவு.[6] பழைய ஏற்பாட்டு வரலாற்றில் இந்த இரண்டு பேரும் இரண்டு வரலாற்று கால திறவுகோல் முகவர்கள். அவர்கள் இயேசுவுடன் தோன்றின காட்சி நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனமும் முடிவுபெறுவதற்கான காலம் சமீபமாயிற்று என்று காட்டும் ஒரு அடையாளம் (காண்க 5:17, 18; லூக்கா 24:44; ரோமர் 10:4; எபேசியர் 2:14-16).*

*இந்த இரண்டு மாபெரும் மனிதர்களும் இயேசுவோடே* **"பேசுகிறவர்களாக** *அவர்களுக்குக் காணப்பட்டார்கள்."* மத்தேயு புத்தகத்தில் *அவர்கள் எவைகளைக் குறித்து பேசினார்கள் என்று குறிப்பிடப்படாத நிலையில், லூக்கா 9:31ல் "... அவர் எருசலேமில் நிறைவேற்றப் போகிற அவருடைய மரணத்தைக் குறித்து பேசிக் கொண்டிருந்தார்கள்" என்று சொல் லப்படுகிறது. அவர்கள் இயேசுவுக்கு முன்பாக தோன்றிய சம்பவம் சிலுவையில் மரிக்கவிருந்த அவருக்கு ஆறுதல்களையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதும் ஒரு காரணமாக இருந்தது. (குறிப்பு: அவர் எருசலேமில் நிறைவேற்றப்போகிற அவருடைய "மரணத்தை" என்று லூக்கா குறிப்பிடுவது ஆங்கிலத்தில் (exodos) "புறப்பாட்டை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) "புறப்பாடு" என்பது எபிரெயர் 11:22ல் "புறப்பாடு" என்றும் 2 பேதுரு 1:15ல் "சென்று போன பின்பு" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

**வசனம் 4. மூன்று சீஷர்களும் விழித்து எழுந்தபோது, பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது என்றார்.** *அவரது வழக்கம் போலவே, பேதுரு (சீஷர்) கூட்டத்தில் இருந்த மற்றவர்களுக்காக பேதுரு பேசினார் - இந்தத் தடவை யாக்கோபு, யோவானுக்காகப் பேசினார். அவர்கள் இயேசுவோடே செல்லுவதற்குக் கிடைத்த சிலாக்கியம் எனவும் இந்த பெரும் நிகழ்ச்சியை கண்ணுறச் செய்த சந்தர்ப்பத்தையும் அவன் உணர்ந்து பார்த்தான். மற்ற ஒன்பது அப்போஸ்தலர்களும் தங்களுடன் கூடப்போகும்படி அழைக்கப்படாததால், கீழே சமவெளியிலே இருந்தார்கள்.*

*பேதுரு தொடர்ந்து,* **உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேயிக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம்** *என்றான். "கூடாரங்கள்" என்று பேதுரு குறிப்பிட்டதன் பொருள் என்ன? இந்த வசனத்தில் கிரேக்க வார்த்தையான (skēnē) என்பது ஒரு "தற்காலிகக் குடில்கள்"* (RSV), *"புகலிடம்"* (NIV), *"தேவ மனிதர்களுக்கென நேர்ந்த விடப்படும் ஆலயங்கள்"* (NLT) *என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

*"கூடாரங்கள்" கூடாரப் பண்டிகை நாட்களில், அல்லது குடில் பண்டிகை நாட்களில், யூதர்கள் வனாந்திரத்தில் நாற்பது ஆண்டுகளாக யாத்திரை செய்த போது, வழிகளில் ஆங்காங்கே கூடாரம் அமைத்து தங்கினதை நினைவு கூரும்படி அனுசரிக்கப்பட்டது (லேவியராகமம் 23:33-44). இந்தப் பண்டிகையில் கலந்து கொண்ட ஒவ்வொரு குடும்பமும் அந்த வாரம் முழுவதும் கூடாரம்*

அமைத்து அதிலே தங்கி பண்டிகையை ஆசரித்தனர். இந்தக் குடில் பண்டிகை வருடந்தோறும் திஸ்ரி மாதத்தில் அனுசரிக்கப்பட்டது. பேதுரு பண்டிகையை ஆசரிக்கும்படி மூன்று கூடாரங்களை போடுவோம் என்று சொன்னாரா? அப்படியிருக்குமேயானால், இந்த மறுரூபக் காட்சி யூதர்களின் கூடார பண்டிகை நாட்களான திஸ்ரி மாதத்தில் (October), பஸ்கா பண்டிகைக்கும் நமது ஆண்டவர் சிலுவையில் அறையப்படுவதற்கும் ஆறு மாதத்திற்கு முன் நிகழ்ந்திருக்கும் என்பதை சுட்டிக் காட்டுகிறது. எப்படியிருப்பினும், இந்த அதிகாரத்தின் பின்பகுதியில் வரிவசூலிக்கப்பட்டதாகக் குறிப்பிடும் சம்பவம் மேற்குறித்த நிகழ்ச்சி வருடத்தின் இந்தக் காலக்கட்டத்தில் நடந்திருக்கக் கூடுமா என்பது சர்ச்சைக்குரிய விஷயமாகும் (காண்க 17:24ன் விளக்கவுரை).

"புகலிடங்கள்." மோசேயும் எலியாவும் இயேசுவுடன் தோன்றினபடியால் (லூக்கா 9:33), அந்த மலையின் மேல் இருந்த மரக்கிளைகளையும் இலைகளையும் பயன்படுத்தி அன்று இரவு அங்கு தங்கும் நோக்கத்துடன் பேதுரு அப்படியொரு ஆலோசனையை ஒருவேளை கொடுத்திருக்கலாம். அதன் பொருள் இதுவென்றால், அவனது கொடுக்கும் செயல் உபசரிப்பு செய்வதாகிறது. ஒரு வேளை மலையிலேயே தங்கும் நாட்களைக் கூட்டிக்கொள்ளவும் அதன் மூலம் அவர்கள் (மூவருடைய) போதனையையும் கேட்டுப் பயனடையவும் நினைத்திருக்கலாம்.

"தேவ மனிதர்களுக்கான ஆலயம்." கூடாரங்கள் என்பது, இஸ்ரவேலர்கள் கூடி வந்து தேவனை தொழுதுகொள்ளும்படி வனாந்திரத்தில் அமைக்கப்பட்ட இடம் (யாத்திராகமம் 25:1-27:21). அது தேவனைக் கனப்படுத்தவும் மகிமைப்படுத்தவும் கட்டப்பட்ட இடம். அதேபோல, ஒருவேளை பேதுரு மூன்று ஆலயங்களைக் கட்டி இயேசு, மோசே, எலியா ஆகியோரை கனப்படுத்தும்படி விரும்பியிருக்கலாம். மூவருமே ஏதோ ஒருவகையில் மகிமையடைந்த நிலையில் இருந்தார்கள் (லூக்கா 9:32), பேதுரு மூவரையும் சமமாகப் பார்த்து ஒவ்வொருவரும் ஒரே மாதிரியாக கனப்படுத்தப்பட வேண்டும் என்ற நினைவில் சொல்லியிருக்கலாம்.

பேதுருவின் உள்நோக்கம் எதுவாயிருந்திருந்தாலும், அவருடைய புரிந்து கொள்ளுதலில் உண்மையான கருத்தை விட்டு விட்டார். இதை லூக்கா, "தான் சொல்லுகிறது இன்னதென்று அறியாமல் சொன்னான்" என்றார் (லூக்கா 9:33). மாற்கு கூடுதலாக அவர்கள் மிகவும் "பயந்திருந்த படியால்," தான் "பேசுகிறது இன்னதென்று அறியாமல்" இப்படிச் சொன்னான் என்று குறிப்பிட்டார் (மாற்கு 9:6). பேதுரு அந்த நேரத்தில் மிகவும் உணர்ச்சி வசப்பட்டதால் உண்மையில் தான் பேசுவதை சிந்திக்காமல் பேசினார். உண்மையான உணர்ச்சிவசப்படுதல் சரியானதே, ஆனால் தனது காரணத்தை எதிர்க்கும் அளவுக்கு ஒருவர் விட்டுவிடக் கூடாது.

**வசனம் 5.** அவன் பேசுகையில் எனும் சொற்றொடரிலிருந்து பேதுருவின் பேச்சில் குறுக்கீடு ஏற்படுவதை சுட்டிக்காட்டுகிறது. தேவன் பேசினபோது, அது ஒரு சிறப்பான அதே நேரத்தில் அச்சமூட்டுகிற வார்த்தைகளாயிருந்தன: **ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது.** வேதாகமத்தில் பின்வரும் பதம் பயன்படுத்தப்பட்டிராவிட்டாலும், மேகமானது வழக்கமாக பிரகாசிக்கிற வெளிச்சத்துடனோ அல்லது சில நேரங்களில் புகையுடனோ புலனறிவில் அறியத்தக்கதாகி வந்தது,[7] இதைத்தான் பின்னர் வந்த யூதமத வல்லுனர்கள்

“செக்கினா” என்று அழைத்தார்கள். புலன்களால் உணரப்பட்ட இந்த மேகம் எப்பொழுதும் தேவனுடைய பிரசன்னத்தை பிரதிநிதித்துவப்படக் கூடியதாக இருந்தது. ஒரு வகையில், பேதுரு குறிப்பிட்ட (கூடாரத்திற்கான) கிளைகளும் இலைகளையும் விட, இந்த மேகம் அவர்கள் மேல் நிழலிட்ட காட்சி பெரிதும் மகிமையுள்ளதாயிருந்தது.[8] கிறிஸ்தவ யுகத்தில், மற்றவர்களுக்காக பேசும் சிறப்பாகத் தெரிவு செய்யப்பட்ட இயேசு மூலமாக தேவன் பேசுகிறார்.[9]

**மேகத்திலிருந்து** தேவனுடைய **சத்தம்** உண்டாகி, **இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்; இவருக்குச் செவி கொடுங்கள்!** என்று சொல்லியது. பின்னர் பேதுரு, “இந்த பர்வதத்தில் இருக்கையில், இயேசு பிதாவாகிய தேவனிடத்திலிருந்து, கனத்தையும் மகிமையையும்” பெற்றார் என்று எழுதினார். இந்த அப்போஸ்தலன் தேவனுடைய வெளிப்பாடு மேகத்திலிருந்து “மகத்துவமுள்ள மகிமையாய்” காணப்பட்டதாக விளக்கப்படுத்துகிறார் (2 பேதுரு 1:17). தேவனுடைய இந்தப் பிரகடனம் மோசே, எலியா, இயேசு ஆகிய மூவரும் சமமானவர்களல்ல என்பதை விளங்கப்பண்ணியது. கிறிஸ்து, தேவனுடைய குமாரனானதால், அவர் தெய்வீகமானவர். இந்த அறிவிப்பு, இயேசு ஞானஸ்நானம் பெற்ற போது, தேவன் சொன்னதற்கு அப்பால் மேலாக சொல்லப்பட்ட ஒரு அறிவிப்பு (காண்க 3:17ன் விளக்கவுரை). அவர் கூடுதலாக, “இவருக்குச் செவி கொடுங்கள்!” என்று சொன்னார். முன்பு இயேசு தமது பாடுகளைக் குறித்து முன்னறிவித்தபோது, அவரைக் கடிந்துகொண்ட பேதுருவுக்கு இந்த அறிவுரை விசேஷமாகப் பொருத்தமானதாக இருந்தது (16:21-23). இயேசு அதிகாரமிக்க தீர்க்கதரிசி, அவருடைய வார்த்தைகளுக்கு எச்சரிக்கையடைய வேண்டும் (உபாகமம் 18:15, 19; நடபடிகள் 3:22, 23; 7:37). அவர் மட்டுமே தேவனுக்காக பேசும் ஒரே நபராக இன்று இருக்கிறார் (எபிரெயர் 1:1, 2). காலங்களின் முடிவில், ஒவ்வொருவரும் தன் நித்திய தீர்ப்பை அடையும்படிக்கு “கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்பட வேண்டும்” (2 கொரிந்தியர் 5:10).

**வசனம் 6.** அச்சமூட்டும் தேவனுடைய பிரசன்னம் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரிடமிருந்து இயல்பான பிரதிபலிப்பை வெளியே கொண்டு வந்தது: அவர்கள் முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள். யாரோ ஒருவருக்கு முன்பாக, ஒருவர் முகங்குப்புற விழுவது, பெரிய மனத்தாழ்மை யையும் மரியாதையையும் அடையாளப்படுத்துகிறது. ஜனங்கள் தேவனையோ அவரால் அனுப்பப்பட்டவர்களையோ எதிர்கொள்ளும்போது, அவர்கள் பெரும்பாலும், முகங்குப்புற, கீழே விழுந்தார்கள் (ஆதியாகமம் 17:13; லேவியராகமம் 9:24; யோசுவா 5:14; நியாயாதிபதிகள் 13:20; 1 இராஜாக்கள் 18:39; எசேக்கியேல் 1:28; 3:23; 43:3; 44:4). மூன்று சீஷர்களின் நெடுஞ்சான் கிடையாக விழுதல் காட்சி மிகுந்த பயத்தோடே கூட இருந்தது. அந்தக் காட்சியில் தேவனுடைய மகிமையைக் கண்ணுற்றதால் - அது தற்செயலாக நடந்திருந்தாலும் - உண்மையாக தங்களுக்கு அதின் விளைவாக மரணம் தான் நிகழும் என்று எதிர்பார்த்தார்கள் (காண்க நியாயாதிபதிகள் 6:22, 23; 13:20-22.

**வசனம் 7. அப்பொழுது, இயேசு வந்து, அவர்களைத் தொட்டு: எழுந்திருங்கள், பயப்படாதேயுங்கள் என்றார்.** இயேசு முதலில் தமது சீஷர்களைத் தொட்டு ஆறுதல்படுத்தினார் (காண்க 8:3, 15; 9:20, 25, 29; 14:36; 20:34) பிறகு தமது ஊக்கமளிக்கும் வார்த்தைகளில் ஆறுதல் அளித்தார்

*(காண்க 9:2, 22; 14:27; 28:10). வெளிப்படுத்தின விசேஷம் 1:17 வசனம் 6, 7வுடன் ஒத்ததாகப் பேசுகிறது. யோவான் கிறிஸ்துவை தரிசனத்தில் கண்டபோது, "செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தார்." அதற்கு மறுமொழியாக, இயேசு தமது வலது கரத்தை யோவான் மேல் வைத்து பயப்படாதே என்று சொன்னார்.*

***வசனம் 8.*** *இயேசு அவர்களுக்கு உறுதியளித்தபோது, சீஷர்கள் தரையிலிருந்து தங்களுடைய முகங்களை ஏறெடுத்துப் பார்த்த பொழுது* ***இயேசுவைத் தவிர வேறொருவரையும் அவர்கள் காணவில்லை.*** NASB *வேதாகமத்தின் கிரேக்க வசனப் பகுதி, வார்த்தைகளை அடுக்கி இயேசு மட்டுமே இருந்தார் என்பதை வலியுறுத்தி பிரதிபலிக்கிறது. தெய்வீக பிரசன்னத்தின் அடையாளமான மேகம் இப்பொழுது மேலே எழும்பியிருந்தது. மோசேயும் எலியாவும் மறைந்து விட்டனர். இப்பொழுது இயேசுவை மட்டும் ஏறெடுத்து பார்த்ததில் மிக அதிகமான பாரம் நீங்கினதைப் போல உணர்ந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.*

## *எலியாவைக் குறித்து சீஷர்களின் கேள்வி (17:9-13)*

***9அவர் மலையிலிருந்து இறங்குகிறபோது, இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும் இந்தக் தரிசனத்தை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்று கட்டளையிட்டார்.***

***10அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: அப்படியானால் எலியா முந்திவரவேண்டும் என்று வேதபாரகர் சொல்லுகிறார்களே, அதெப்படி யென்று கேட்டார்கள்.***

***11இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக: எலியா முந்தி வந்து எல் லாவற்றையும் சீர்படுத்துவது மெய்தான்.***

***12ஆனாலும், எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள்; இவ்விதமாய் மனுஷகுமாரனும் அவர்களால் பாடுபடுவார் என்றார்.***

***13அவர் யோவான் ஸ்நானனைக் குறித்து தங்களுக்குச் சொன்னார் என்று சீஷர்கள் அப்பொழுது அறிந்துகொண்டார்கள்.***

***வசனம் 9. இயேசுவும்*** *அவருடைய மூன்று சீஷர்களும் மலையிலே இரவைக்கழித்தனர்போல் தெரிகிறது, ஏனெனில் லூக்கா 9:37 சொல்லுகிறது, "மறுநாளில் அவர்கள் மலையிலிருந்திறங்கினபோது," என்று சொல்லப்படுகிறது. அவர்கள் இறங்குகிறபோது,* ***மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும், இந்தத் தரிசனத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார்.*** *அவருடைய கொள்ளையின் பழக்கப்படி, கர்த்தர் அவர்களுக்கு கட்டளையிட்டு நடந்த அற்புதத்தைக் குறித்தும் தாம் கிறிஸ்து என்பதற்கான அடையாளத்தைக் குறித்தும் அமைதலாய் இருக்கும்படி கட்டளையிட்டார் (காண்க 8:4; 9:30; 12:16; 16:20). மறுரூபமான அறிவைப் பரப்புவதால் பெரும்பாலான யூதர்களுக்கு பயனளிக்கப் போவதில்லை, ஏனெனில் அவர்கள் ஒரு இராணுவ வீரனான மேசியாவையே எதிர்பார்த்தனர், அவர் வந்து பூமிக்குரிய இராஜ்யத்திலே ஆளுகை செய்வார் என்று காத்தி*

*ருந்தனர். ஆக அவர்கள், நடந்த நிகழ்ச்சியை, தவறாக வியாக்கியானம் செய்திருப்பார்கள். எப்படியிருப்பினும், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவருடைய மறுரூபமான காட்சி அநேக உண்மைகளை சூழ்ந்து கொள்ளக் கூடும்: (1) இயேசுவின் தெய்வீகம், (2) அவர் சிலுவையில் மரிக்க சித்தங் கொண்டது, (3) அவர் தம்முடைய ஆவிக்குரிய ஆளுகையை பரலோகத்திலிருந்து செய்வார் என்கிற உண்மை, மற்றும் (4) வாக்குத்தத்தம் செய்யப்பட்ட அவருடைய மறுவருகை (2 பேதுரு 1:16-18).*

*"தரிசனம்" என்பதற்கான கிரேக்க வார்த்தை (horama) மறுரூபக் காட்சியின் உண்மை நிலையை குறைத்துவிட முடியாது. "தரிசனம்" எனும் வார்த்தை அடிக்கடி புதிய ஏற்பாட்டின் சம்பவத்தைக் குறிக்கிறபடியால் (நடபடிகள் 9:10; 10:3; 11:5; 12:9; 16:9; 18:9), எளிமையாகக் குறிப்பிட்டால் "பார்த்தவை" என அர்த்தப்படும். இந்தப் பதம் எரிந்து கொண்டிருந்த முட்செடிக்கு நடபடிகள் 7:31ல் பயன்படுத்தப்பட்டுள்ளது, அதில் மோசே அந்த தரிசனத்தைக் "கண்டு, அதிசயப்பட்டு" என்று சொல்லப்படுகிறது (காண்க யாத்திராகமம் 3:3).* NIV *வசனம் 9ல் "நீங்கள் பார்த்ததை யாருக்கும் சொல்ல வேண்டாம்" என்று சொல்லப்பட்டுள்ளது.*

*மீண்டும் ஒருமுறை இயேசு தமக்கு வரவிருந்த மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் குறிப்பிடுகிறார் (காண்க 16:21). ஆகிலும், அவரது வார்த்தைகள் அவருடைய உயிர்த்தெழுதலையே மிகத் தெளிவாக சுட்டிக் காட்டியது. அவரது வார்த்தையால் தமது சீஷர்களை கல்லறையின் மேல் வெற்றியை நோக்கினதாக இருக்கும்படி திருப்பினாரேயன்றி தமது பாடுகளையும் மரணத்தையும் நோக்கியல்ல.*

***வசனம் 10. சீஷர்கள்*** *இன்னமும் மோசேயும் எலியாவும் தோன்றின காட்சியின் அர்த்தத்தை உறுதியாக புரிந்து கொள்ளவில்லை, எனவே அவர்கள்* ***அப்படியானால், எலியா முந்திவரவேண்டும் என்று வேதபாரகர் சொல்லுகிறார்களே, அதெப்படியென்று கேட்டார்கள்?*** *அவர்களுடைய கேள்வி மல்கியா 4:5ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தோடு சம்பந்தப்பட்டிருந்தது: "இதோ கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்!" இந்த வசனத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு, எலியா மெய்யாகவே (சரீரத்தில்) வருவார் என்று வேதபாரகர் போதித்தார்கள்.[10] "முந்தி" எனும் வார்த்தையை, சீஷர்கள் நியாயத்தீர்ப்புக்கு முந்தி என்று எடுத்துக் கொண்டிருந்திருப்பார்களேயானால், பிறகு மறுரூப நிகழ்ச்சிதான் அந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக இருக்குமோ என்பது அவர்களுக்குப் புதிராக இருந்தது. மற்றொரு சாத்தியக்கூறு என்னவெனில் எலியா மேசியாவுக்கு "முந்தி" வரவேண்டும் என்று அவர்கள் போதிக்கப் பட்டிருந்தார்கள்.[11] இந்த அடிப்படையில், எலியா மலையில் வருவதற்கு முந்தி ஏன் இயேசுவின் வருகை இடம் பெற்றது என்பது அவர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தியது.*

***வசனம் 11.*** *அதற்கு பதிலளித்த இயேசு,* ***எலியா வந்து எல்லாவற்றையும் சீர்படுத்துவது மெய்தான்*** *என்று சொன்னார். அவரது இந்த விமர்சனம் வேதபாரகருடைய உபதேசத்தோடு ஒத்துப்போவதாக இருந்தது. அது தீர்க்கதரிசி மல்கியா முன்னுரைத்து, எலியா முந்தி வந்து, "அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய*

*இருதயத்தை அவர்களுடைய பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்" என்று சொல்லியிருந்த வார்த்தைகளையும் உறுதிப்படுத்தக் கூடியதாக இருந்தது (மல்கியா 4:6). "எல்லாவற்றையும்" சீர்படுத்துவான் எனும் வாக்கியம் கிறிஸ்தவ யுகத்தை கொண்டு வருவதாக எடுத்துக் கொள்ள இயலாது, அப்படி விளக்கம் கொடுக்கப்பட்டால், மேசியாவால் மட்டுமே செய்யக் கூடிய காரியங்களை எலியா செய்வது போல தோன்றும். மாறாக, "எல்லாவற்றையும் சீர்படுத்துவார்" என்பது மேசியாவின் வருகைக்கான ஆயத்த ஊழியத்தை செய்வான் என்பதைக் குறிப்பிடுகிறது, அதன் விளைவாக மனந்திரும்புதலும் ஆவிக்குரிய புதுப்பித்தலும் நிகழும்.*[12]

***வசனம் 12.*** *பிறகு இயேசு அந்த பிரச்சனையை தெளிவுபடுத்துகிறார்:* ***ஆனாலும், எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள்.*** *கர்த்தர் வேதபாரகருடைய குறிப்பிடப்பட்ட பொதுவான உபதேசத்தின் பயன்பாட்டுடன் ஒத்துப்போக வில்லை. அவர்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசி மறுபடியும் தோன்றுவார் என்றே எதிர்பார்த்திருந்தனர் (காண்க யோவான் 1:19, 21), அந்த நேரத்தில் தேவன் யோவான் ஸ்நானனை "[கிறிஸ்துவுக்கு] முந்தி எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாக" அனுப்பினார் (லூக்கா 1:17). "எலியா" (யோவான் ஸ்நானன்) ஏற்கனவே வந்தாயிற்று, ஆனால் அவர் விடுத்த மனந்திரும்பும்படியான அறைகூவலை யூத மதத்தலைவர்கள் புறந்தள்ளினார்கள் (3:7-10; 11:16-18; 21:25). யோவான் ஒரு நீதியுள்ள மனுஷனாக இருந்த போதிலும், ஏரோது அவரை சிறைவைத்து முடிவில் கொலை செய்தான் (14:3-12). இயேசு தாமும் அவ்விதமாய்* ***பாடுபடுவார்*** *என்று குறிப்பிட்டார்.*

***வசனம் 13.*** *இயேசு கொடுத்த விளக்கத்துக்குப் பின்பு,* ***அவர் யோவான் ஸ்நானனைக் குறித்துத் தங்களுக்குச் சொன்னார் என்று சீஷர்கள் அப்பொழுது அறிந்து கொண்டார்கள்.*** *முந்தின நிகழ்ச்சியொன்றில் யோவானின் குணாதி சயத்தைக் குறித்து விவாதித்த கர்த்தர் சொன்னார், "நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால் வருகிறவனாகிய எலியா இவன்தான்" என்றார் (11:14). பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோர் மலையிலிருந்து இறங்கி வரும்போது இந்த வார்த்தைகளை நினைவுபடுத்திக் கொண்டார்கள்.*

✧✧✧✧✧ ***பாடங்கள்*** ✧✧✧✧✧

## தேவனுக்கு நமது ஊழியம் (அதிகாரம் 17)

1. *தேவனுக்கு நாம் செய்யும் ஊழியம் சிலவேளைகளில் பரலோகத்தையும் உட்படுத்துகிறது* (17:1-13). மலையிலே வெளிப்படுத்தப்பட்ட இயேசுவின் மகிமை வானுலகம் சார்ந்தது. அப்படிப்பட்ட காட்சியை நாம் அனுபவிக்க இயலாது, ஆகையால், தேவனுடைய வசனத்தை நாம் தியானிப்பது பரலோகம் சார்ந்த சிந்தனையைக் கொண்டுவர வேண்டும். நமது மனம் முழுமையாக பரலோகத்தின் நித்திய வாழ்க்கையை குறித்த சிந்தனையால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும் (2 கொரிந்தியர் 4:16; 5:1-7; 2 பேதுரு 3:13).

2. *தேவனுக்கு நாம் செய்யும் ஊழியம், மாமிச மற்றும் பூமிக்குரிய ரீதியை உட்படுத்தியது* (17:14-23). மூன்று அப்போஸ்தலர்களும் மலையிலேயே

தங்கியிருக்க முடியாதிருந்தது. அவர்கள் மலையின் மேலிருந்து ஒரு மெய்மறந்த சூழலை விட்டு பூமியின் கடின பிரயாச சூழலுக்கு இறங்கி வரவேண்டியிருந்தது. நாமும் நமது அன்றாட தேவைகளில் அதே மன ஈடுபாடு கொண்டவர்களாக இவ்வுலகில் வாழவேண்டும். சில சபை கூடும் கட்டிடங்களுக்கு முன்பாக கதவுகளில் போடப்பட்டுள்ள வாசகம், "தொழுகைக்காக நுழையுங்கள், ஊழியத்துக்காக புறப்பட்டுச் செல்லுங்கள்" என்று எழுதப்பட்டிருக்கும்.

3. *தேவனுக்கு நாம் செய்யும் ஊழியம், சட்டம், மற்றும் அரசியல் ரீதியை உட்படுத்தியது* (17:24-27). வரி செலுத்துதலைக் குறித்து இயேசுவின் போதனை அவருடைய மற்ற போதனைகளோடும் முன் உதாரணங்களோடும் முரண்பட்டதாயிருக்க வில்லை (22:21). பவுலும் இதே பிரகாரமான கீழ்ப்படிந்துள்ள கொள்கையோடுதான் ஆளும் அதிகாரங்களுக்கு உரிய ரீதியாக போதித்தார் (ரோமர் 13:1-7). கிறிஸ்தவர்கள் ஒரு சிறப்பான குடிமக்களாய் வாழ்வதற்கான கடமை பெற்றவர்கள், அவர்கள் வாழும் இடத்தில் எப்படிப்பட்ட அரசியல் சூழல் இருந்தாலும் அது பொருட்டல்ல. பவுல் தனது குடியுரிமையை ஒரு பொக்கிஷமாக பாதுகாத்து சட்டரீதியாக தனக்குள்ள உரிமைக்காக அபயமிட்டார் (நடபடிகள் 25:11).

## இயேசுவின் மறுரூபம் (17:1-8)

இயேசுவின் மறுரூபக் காட்சி குறைந்த பட்சம் ஐந்து வித்தியாசப்பட்ட கருத்துத் தலைப்புகளைப் போதிக்கிறது.

1. *பழைய உடன்படிக்கை விரைவில் மறைந்து அந்த இடத்தில் புதிய பிரமாணம் நிலை நிறுத்தப்படுவதாயிருந்தது.* நியாயப்பிரமாணம் "பழமையானதும் நாள் பட்டதுமாயிருந்து" அது "உருவழிந்து போகும் காலம் சமீபமாயிற்று" (எபிரெயர் 8:13). சீக்கிரத்தில் அது புது உடன்படிக்கையைக் கொண்டு மாற்றப்பட்டு, எங்குமுள்ள எல்லா மனுஷரையும் உட்படுத்தவிருந்தது (8:7-12).

2. *நாம் மரித்தபின்னும் நிலை நிற்காமல் மறைந்து விடுவதில்லை.* மலையிலே மோசேயும் எலியாவும் இதை தங்களுடைய பிரசன்னத்தால் வெளிப்படுத்தினார்கள். மரணம் என்பது மாம்சத்திலிருந்து ஆவிக்குரிய நிலைக்கு மாறுவது (பிரசங்கி 12:5). மாமிசப்பிரகாரமான மரணம் சரீரத்தி லிருந்து ஆவி (ஆத்துமா) பிரிந்து செல்லுகிறது (பிரசங்கி 12:7; யாக்கோபு 2:26). ஆவிக்குரிய பிரகாரமான மரணம் என்பது தேவனிடத்திலிருந்து ஆத்துமா பிரிகிறது (2 தெசலோனிக்கேயர் 1:9).

3. *மரணத்தில் நமது அடையாளத்தை நாம் இழப்பதில்லை.* பேதுரு, யோவான் யாக்கோபு ஆகியோர் எப்படி மோசேயையும் எலியாவையும் அடையாளம் கண்டுபிடித்தனர் என்று தெரியாது; ஆகிலும் இந்தக் காட்சியில் மோசே இன்னமும் மோசேயாகத்தான் இருந்தார், எலியா இன்னும் எலியாவாகத்தான் இருந்தார். பிச்சை எடுத்துக் கொண்டிருந்த லாசரு இன்னமும் லாசருவாகத்தான் ஆபிரகாமின் மடியில் இருந்தார். மற்றும் ஐசுவரியவான் வேதனையுள்ள இடத்தில் இன்னமும் ஐசுவரியவானாகத்தான் இருந்தான் (லூக்கா 16:19-31). பவுல் பூமியில் தான் அறிந்திருந்தவர்களை பரலோகத்தில் அறிய எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார் (2 கொரிந்தியர் 4:14; 1 தெசலோனிக்கேயர் 2:19, 20). அவர் தெசலோனிக்கேயர்களை ஊக்கப்படுத்த

எதிர்காலத்தில் அவர்களும் அடையாளம் கண்டு கொள்ளப்படுவார்கள் என்ற கருத்தைப் பயன்படுத்தினார் (1 தெசலோனிக்கேயர் 4:13-18).

4. *கிறிஸ்துவே நமது தொழுகைக்கான இலக்கு.* மோசேயும் எலியாவும் பெரிய நபர்களாயிருப்பினும், அவர்கள் கிறிஸ்துவுக்கு சமமானவர்கள் அல்ல. அவர்கள் மனுஷர்களே, அவர் தெய்வம். அவர்கள் ஆராதிக்கப்படுபவர்களல்ல, ஆனால் இயேசு ஆராதிக்கப்படுபவர்.

5. *கிறிஸ்து இன்று தேவனுக்காக பேசுபவராயிருக்கிறார்.* வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குள் நுழைவதற்கு முன் மோசே இஸ்ரவேலரிடத்தில் தேவனுக்காக பேசக் கூடியவராக இருந்தார் (யாத்திராகமம் 3; 4); மற்றும் எலியா, வாய்மொழி தீர்க்கதரிசிகளில் மிகப்பெரிய நபராகக் கருதப்பட்டார், அவர் யூதாவுக்கும் இஸ்ரவேலுக்கும் தேவனுடைய சார்பாக பேசுபவராயிருந்தார். மறுரூப மலையில் தேவன் அளித்த அறிவிப்பின்படி நாம் வாழுகிற இந்த யுகத்தில் இயேசுவே தேவனுடைய சார்பில் நமக்காக பேசுகிறவராயிருக்கிறார் (17:5; எபிரெயர் 1:1, 2). இக்கால தீர்க்கதரிசிகள் என்று சொல்லிக் கொள்வோர் எவரும் தேவனுக்காகப் பேசுகிற அதிகாரம் பெற்றவர்களல்ல, கடைசி கால வெளிப்பாடு என்று மனுஷர்களில் யாருக்கும் இன்று கொடுக்கப்படுவதுமில்லை (யூதா 3).

## மரணம் என்பது ஒரு யாத்திரை புறப்பாடு (17:3)

இயேசு மறுரூபமானபோது, மோசேயினிடத்திலும் எலியாவிடத்திலும் அவர் பேசினார். அவர்கள் அவர் எருசலேமில் நிறைவேற்றப் போகிற "மரணத்தைக் குறித்து" ("புறப்படுதலைக்" குறித்து) (*exodos*) பேசிக் கொண்டிருந்தார்கள் என்று லூக்கா 9:31 சொல்லுகிறது. மரணம் என்பது மாமிசநிலையிலிருந்து ஆவிக்குரிய நிலைக்கு மாறுவது (பிரசங்கி 12:5, 7; பிலிப்பியர் 1:19-21). கிறிஸ்தவர்களுக்கு, மரணமானது எல்லாவற்றையும் மறந்து விடச் செய்கிற ஒரு பயணமல்ல, மாறாக அழிவுறும் பூமிக்குரிய சரீரத்தின் அடிமைத்தனத்திலிருந்து பரலோக சந்தோஷங்களை அனுபவிப்பதற்காகப் பெறும் விடுதலை (யோவான் 14:1-6; 2 கொரிந்தியர் 5:1-4). மோசேயும் எலியாவும் இயேசுவுக்குச் செய்தலைக் காட்டிலும் - இயேசு அதிகமாக நமக்குச் செய்திருக்கிறார். மரணத்தை ஜெயித்ததினால், ஒருவன் மரித்தாலும் பிழைப்பான் எனும் உறுதியான நம்பிக்கையை நமக்கு கொடுத்து, கல்லறை நம்மை பிடித்து வைப்பதில்லை என்பதை உறுதியளித்தார் (1 கொரிந்தியர் 15:50-58). அவர் நமது கடைசி சத்துருவை பரிகரித்து வெற்றி கொண்டதால், நாமும் அந்த வெற்றியிலே பங்குடையவர்களாவோம் (1 கொரிந்தியர் 15:25, 26).

## வரவிருந்த எலியா (17:9-13)

சீஷர்கள் இயேசுவிடம், அப்படியானால் "எலியா முந்தி வரவேண்டும்" என்று வேதபாரகர் போதிப்பது ஏன் என்று கேட்டபோது (17:10), அவர்களின் கேள்வி அதிகபட்ச ரபீமார்களின் பாரம்பரியத்தைச் சார்ந்திருந்தது. அவர்களுடைய கேள்வி மல்கியா 4:5, 6ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசன அடிப்படையில் இருந்தது.

இயேசு அவர்களிடம், "எலியா வந்தாயிற்று, அவர்கள் அவனை ஏற்றுக் கொள்ளவில்லை" என்பதாகச் சொன்னார் (17:12). "அவர் யோவான்

*ஸ்நானனைக் குறித்துத் தங்களுக்குச் சொன்னார் என்று சீஷர்கள் அப்பொழுது அறிந்து கொண்டார்கள்" (17:13). இயேசு முன்பு ஒருமுறை வரவிருந்த எலியா யோவான் ஸ்நானன்தான் என்று சொல்லியிருந்தார் (11:14). ஒரு தேவ தூதன் யோவானின் தகப்பனிடத்தில், சகரியாவிடத்தில், "இந்த மகன் எலியாவின் ஆவியையும் பெலனையும் உடையவனாயிருப்பான்" என்று சொல்லியிருந்தான் (லூக்கா 1:17), யோவான், ஏன் தான் எலியா அல்லவென்று சொன்னான் (யோவான் 1:21)? இயேசு குறிப்பிட்ட அர்த்தத்தில்தான் யோவானும் நிச்சயமாக சொல்லியிருக்கக் கூடும், அவன் [யோவான்] எலியாவல்ல என்று சொன்னான், எலியா தீர்க்கதரிசனம் உரைத்த அதே ஆவியிலே யோவான் பிரசங்கித்தான், ஆகிலும் அவன் உண்மையான, மறு அவதாரம் எடுத்து வந்த எலியா அல்ல.*

---

*குறிப்புகள்*

[1]R. T. France, *The Gospel According to Matthew,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 262. [2] *காண்க* Josephus *Wars* 2.20.6; 4.1.8. [3]*ஆங்கில பதத்தின் தெரிவு "மறுரூபமானார்" என்பது இலத்தீன வல்கேட் (transfiguratus est)*. (Jack P. Lewis, *A Commentary on the Gospel According to Matthew,* Part 2, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 44.) [4]Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary,* vol. 1, *Matthew, Mark, Luke,* ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 106. [5]*மற்றொருவர் ஏனோக் (ஆதியாகமம் 5:24).* [6]*Deuteronomy Rabbah* 3.17. *மோசே மறுபடியும் வருவார் என்ற எதிர்பார்ப்பிற்கான ஆதாரம் மிகவும் குறைவு, எலியாவின் வருகை குறித்து ஏராளமான வசனங்கள் காணப்படுகின்றன (காண்க 11:14; 17:10-12 ஆகியவற்றின் விளக்கவுரை). வெளிப்புற ஆதாரங்களாக எலியாவின் வருகை பற்றி குறிப்பிடுபவை,* Craig S. Keener, *A Commentary on the Gospel of Matthew* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1999), 439-40, n. 122. [7]*காண்க யாத்திராகமம் 13:21, 22; 16:10; 24:15-18; 40:34-38; எண்ணாகமம் 9:17; 11:25; உபாகமம் 1:33; 5:22; 1 இராஜாக்கள் 8:10-13.* [8]Robert H. Gundry, *Matthew*: *A Commentary on His Literary and Theological Art* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 344. [9]*காண்க* Donald A. Hagner, *Matthew 14-28*, Word Biblical Commentary, vol. 33B (Dallas: Word Books, 1995), 493. [10]Sirach 48:10, 11; Mishnah *Eduyoth* 8.7; *Sotah* 9.15; *Baba Mesia* 3.4, 5; Talmud *Erubin* 43b. John Lightfoot, *A Commentary on the New Testament from the Talmud and Hebraica: Matthew - 1 Corinthians*, vol. 2, *Matthew, - Mark* (Oxford University Press, 1859; reprint, Grand Rapids, Mich.: Baker, 1979), 244-46.

[11]*காண்க* Justin Martyr *Dialogue with Trypho* 8; 49. [12]Hagner, 499.